சுருக்கம்

பொதுப்பணிகள் – இணைக்கல்வி தகுதி நிர்ணயம் – பத்தாம் வகுப்பு (SSLC ) தேர்ச்சி பெற்ற பின்னர் இரண்டு ஆண்டு ஆசிரியர் பயிற்சி பட்டயச் சான்று (Diploma in Teacher Training) – மேல்நிலைக் கல்விக்கு (+2) இணையாகக் கருதுதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி பக3(1) துறை

அரசாணை (நிலை) எண். 165

நாள் 15.10.2014
திருவள்ளுவராண்டு 2045
ஜய வருடம் புரட்டாசி 29

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண். 906, பள்ளிக்கல்வி, நாள் 16.06.1987.
2. அரசாணை (நிலை) எண். 107, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, நாள் 08.08.2009.
3. அரசாணை(நிலை) எண். 242, பள்ளிக்கல்வி, நாள் 18.12.2012.
4. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 120600/சி5/இ1/2011, நாள். 14.11.2012, 05.02.2013 மற்றும் 29.01.2014.

------

ஆணை :-

தமிழ்நாட்டில் 10+2 முறை கல்வி 1978–79 ஆம் கல்வியாண்டிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்டது. 1986–87–ம் கல்வி ஆண்டு வரை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் சேருவதற்கு குறைந்தபட்ச கல்வித்தகுதி எஸ்.எஸ்.எல்.சி (10ம்வகுப்பு) ஆகும். எஸ்.எஸ்.எல்.சி (10ம்வகுப்பு) கல்வித்தகுதி உடைய மாணவர்கள் 1986–87 வரை ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். அரசாணை (நிலை) எண். 906, கல்வி, நாள். 16.06.1987–ல், 1987–88 முதல் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் சேர குறைந்தபட்ச கல்வித்தகுதி +2 என நிர்ணயம் செய்யப்பட்டது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில் +2 (மேல்நிலைக்கல்வித் தேர்வு) தேர்ச்சி பெறாமல் திறந்தவெளிப் பல்கலைக்கழகங்களின் வழியாகப் பட்டயம் / பட்டம், முதுகலைப் பட்டங்களைப் பெற்று பள்ளிக்கல்வித்துறையில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான கருத்துருவை ஏற்க இயலாது என அரசுக் கடித எண் 34861/ப.க 3(2) /2011, பள்ளிக்கல்வித்துறை, நாள் 25.10.2011–ல் தெரிவிக்கப்பட்டது. இதனையடுத்து 01.01.2011 மற்றும் 01.01.2012 –ம் ஆண்டுக்கான பட்டதாரி ஆசிரியர் பதவி உயர்வுக்கான முன்னுரிமைப் பட்டியல்களில் +2 (மேல்நிலைக்கல்வித் தேர்வு) தேர்ச்சி பெறாமல் பட்டம் பெற்றவர்கள் நீக்கம்

செய்யப்பட்டனர். SSLC (10th) பயின்றுவிட்டு ஆசிரியர் பயிற்சி (Teacher Training Course) 2 ஆண்டுகள் படித்து பட்டப்படிப்பு /பி.எட். தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள், அதாவது +2 பயிலாதவர்கள், தங்களை முன்னுரிமைப் பட்டியலிலிருந்து நீக்கம் செய்ததை எதிர்த்து பல்வேறு வழக்குகள் தொடர்ந்து அவ்வழக்குகளில் மனுதாரர்களுக்கு சாதகமான தீர்ப்பாணைகள் வழங்கப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் 11ஆம் வகுப்பு (old SSLC) பயின்ற பின்பு அரசுத் தேர்வுகள் இயக்ககத்தால் வழங்கப்பட்ட இரண்டாண்டு ஆசிரியப் பட்டயப்படிப்பு, பிறகு தொலைத்தூரக்கல்வி மூலம் பெற்ற இளங்கலை பட்டப்படிப்பு (open university) (11+2+3) என்ற முறையில் படித்தவர்களை பத்தாம் வகுப்பு, பன்னிரெண்டாம் வகுப்பு (+2) படித்து பிறகு 3 வருட இளங்கலைப் பட்டப்படிப்பு படித்தவர்களுக்கு இணையாகக் கருதி பொதுப்பணிகளில் வேலைவாய்ப்பு மற்றும் பதவி உயர்வு பெற அங்கீகரித்து ஆணை வழங்கப்பட்டுள்ளது. பத்தாம் வகுப்புக்கு (SSLC) பின்பு இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சி பட்டய சான்றினை முடித்துவிட்டு, அதன்பின் இளங்கலைப் பட்டப்படிப்பு முடித்தவர்களுக்கு பதவி உயர்வு வழங்குவது பற்றி அவ்வரசாணையில் குறிப்பிடப்படவில்லை.

4. மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் பத்தாம் வகுப்புக்கு (SSLC) பின்பு பெறப்பட்ட இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சி பட்டய சான்றினை (Diploma in Teacher Training) மேல்நிலைக்கல்விக்கு (+2) இணையாக கருதி பதவி உயர்வு வழங்க வேண்டும் என்று நீதிமன்ற தீர்ப்பாணைகள் பெறப்பட்டுள்ள நிலையில், மேற்சொன்ன தீர்ப்பாணைகளின் அடிப்படையில் இறுதி ஆணைகள் வழங்க வேண்டியுள்ளதால், நீதிமன்ற அவமதிப்பு எழுவதை தவிர்க்கும் பொருட்டு பத்தாம் வகுப்புக்கு (SSLC) பின்பு பெறப்பட்ட இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சி பட்டயச் சான்றினை (Diploma in Teacher Training) மேல்நிலைக் கல்விக்கு (+2) இணையாக கருதலாமா என்பதற்கு உரிய ஆணை வழங்கிட பள்ளிக்கல்வி இயக்குநர் கோரியுள்ளார்.

5. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு பரிசீலனை செய்தது. பத்தாம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) தேர்ச்சி பெற்ற பின்னர் இரண்டாண்டு ஆசிரியர் பயிற்சி பட்டய சான்று (Diploma in Teacher Training) பெற்ற கல்வித்தகுதியினை மேல்நிலைக்கல்விக்கு (+2) இணையாக கருதி பதவி உயர்வு வழங்கவேண்டும் என்று சென்னை உயர் நீதிமன்றத்தில் தீர்ப்பாணைகள் பெறப்பட்டுள்ள நிலையில், பத்தாம் வகுப்பு (எஸ்.எஸ்.எல்.சி) தேர்ச்சி பெற்ற பின்னர் ஜூலை 1987க்கு முன்பாக பெறப்பட்ட இரண்டு ஆண்டு ஆசிரியர் பயிற்சி பட்டயச் சான்றினை (Diploma in Teacher Training) மேல்நிலைக் கல்விக்கு(+2) இணையாக கருதி ஆணை வெளியிடலாம் என அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

த. சபிதா
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை – 6
தொடக்கக்கல்வி இயக்குநர், சென்னை–6
நகல்
செயலாளர், தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், சென்னை – 3.

த.பி.பா...

அனைத்து தலைமைச்செயலகத்துறைகள், சென்னை – 9.
மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை – 9
பள்ளிக்கல்வி நிர்வாகத்தின்கீழ் உள்ள அனைத்து துறை தலைவர்கள்
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத்துறை, சென்னை – 9.
பள்ளிக்கல்வித்துறையிலுள்ள அனைத்து பிரிவுகள், சென்னை–9
முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், பள்ளிக் கல்வித் துறை, சென்னை – 600 009.
உயர்கல்வித் துறை, சென்னை–9.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்.